**சாட்சியின் வாக்குமூலம்**

பாகம் 111 சுற்றிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச.பிரிவு - 1 மற்றும் உ.வி.மு.ச

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**அசல் வழக்கு எண்.33/2021**

**பி.வா.சா.1**

| | | |
|---|---|---|
| சாட்சியின் பெயர் | : | கோவிந்தராஜ் |
| தகப்பனார் பெயர் | : | சுப்புராஜ் |
| வயது | : | 57/2026 |
| தொழில் | : | |
| மதம் | : | |
| ஜாதி | : | |
| கிராமம் | : | காணப்பாடி |
| தாலுகா | : | வேடசந்தூர் |
| மாவட்டம் | : | திண்டுக்கல் |

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 13.07.2026 ம் தேதி என்னால் சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**முன் விசாரணை**

நான் இந்த வழக்கின் பிரதிவாதி. நான் பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாணவாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். விபரங்களை நான் கூற எனது வழக்கறிஞர் அதை தயார் செய்தார். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

| **வரிசை எண்** | **தேதி** | **ஆவண விபரம்** | **தன்மை** |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | --- | சர்வே எண்.294ன் பட்டா | கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.2 | --- | சர்வே எண்.294ன் புலவரைபடம் | கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.3 | --- | களிங்கு ஓடையின் மாதிரி வரைபடம் | அசல் |
| பி.வா.சா.ஆ.4 | --- | மாற்றுப்பாதையை காட்டக்கூடிய புகைப்படம் மற்றும் ரசீது | அசல் **(தாவா சொத்து அமைந்துள்ள காணப்பாடி கிராமத்திற்கு உட்பட்ட** |

| | | | |
|---|---|---|---|
| | | | பகுதியில் தாவா சொத்திற்கு மாற்றுப்பாதை உள்ளது என்பதை காட்டாமல் வடமதுரை, செங்குளத்துப் பட்டியில் உள்ள பகுதியில் மாற்றுப்பாதை உள்ளதாக மேற்படி ஆவணம் தாக்கல் செய்துள்ளதால் அதை குறியீடு செய்வதற்கு கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை செய்தார். மேற்படி ஆட்சேபணையுடன் ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.) |
| பி.வா.சா.ஆ.5 | --- | வாதியின் நிலத்தின் வழியாக பிராது சொத்துக்கு செல்ல வாதி, வாதியின் மனைவி மற்றும் வாதியின் சகோதரர்கள் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் பாதையை காட்டக்கூடிய வாதியின் வகையறாக்கள் பெயரில் உள்ள சர்வே எண்களின் கணினி சிட்டா (எண்ணிக்கை - 7) | கணினி நகல்<br><br>**(மேற்படி ஆவணங்கள் வாதிகளுக்குரிய பட்டா என்பதால் அவை வழக்கிற்கு தொடர்பற்ற ஆவணங்கள் என்பதால் அதை குறியீடு செய்வதற்கு வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபணை செய்தார். மேற்படி ஆட்சேபணையுடன் ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.)** |
| பி.வா.சா.ஆ.6 | --- | வரைபடம் | அசல்<br><br>**(மேற்படி ஆவணத்தில் சம்பந்தப்பட்ட வருவாய்துறை அதிகாரிகளின் கையொப்பமோ, அலுவலக முத்திரையோ இடப்படாததால் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்பட்டது. ஆட்சேபணையுடன் ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது. )** |
| பி.வா.சா.ஆ.7 | --- | பிள்ளையார் குல கரையில் இருந்து சர்வே எண்.275, 285 வழியாக நிலத்திற்கு செல்லும் பாதையை காட்டக்கூடிய வரைபடம் (எண்ணிக்கை -2) | கணினி பதிவிறக்க நகல்<br><br>**(மேற்படி ஆவணத்தில் சம்பந்தப்பட்ட வருவாய்துறை அதிகாரிகளின் கையொப்பமோ, அலுவலக முத்திரையோ** |

| | | | |
|---|---|---|---|
| | | | இடப்படாததால், வழக்கிற்கு தொடர்பற்ற ஆவணம் என்பதால் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்பட்டது. ஆட்சேபணையுடன் ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது. ) |

பிராதை தள்ளுபடி செய்ய பிரார்த்திக்கின்றேன்.

**வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**